காசிமடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை.

திருக்கடவூர்த் திருமுறைத்திரட்டு.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்

திருவுளப்பாங்கின்படி

SCANNED
SL No:...183.....

இயற்றமிழ்ப்புலவர்

நகராமலை நா. இராமலிங்கம் பிள்ளையால்

தொகுக்கப் பெற்றது.

பொருளடக்கம்.

		பக்கம்
1.	திருவுருவம்	
2.	முகவுரை	
3.	திருக்கடவூர்த் திருமுறைத்திரட்டு	1—46

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்
ஞாபகார்த்த வெளியீடு.

உ

செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்.

காவளர்த்துங் குளந்தொட்டுங் கட்டுப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் நானிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகை வினைத்துறை நின்றார்.

செந்திலாண்டவன் துணை.

முகவுரை.

'ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சீலமே யால வாயில் சிவபெரு மானே யென்றார்.'

திருக்கடவூர்த் திருமுறைத் திரட்டு என்பது திருக்கடவூரில் கோயில்கொண்டுள்ள காலகாலப் பெருமானைப் பற்றிய பன்னிரு திருமுறைகளிலுள்ள திருப்பாசுரங்களைத் திரட்டப் பெற்றதாகும்.

கோயில் என்பது பொதுவகையாகப் பல பதிகளிலுமுள்ள ஆலயங்களைக் குறிக்குமாயினும் சிறப்பு வகையாகத் தில்லையம்பலத்தையே குறித்தல்போல, காலனைக் காய்ந்த கருணைத்திறம் பொது வகையாகப் பல தலங்களிற் கூறப்பெற்றதாயினும் சிறப்பு வகையாகக் கடவூர்த் தலத்தையே காட்டுவதால் அத் தலத்தின் பெயராலேயே தொகுக்கப் பெற்றது.

பன்னிரு திருமுறைகளாவன :—தேவாரத் திருமுறைகள்—எ, திருவாசகம், திருக்கோவையார்—அ, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு கூ, திருமந்திரமாலை—க0, பிரபந்தமாலை—கக, திருத்தொண்டர் புராணம்—கஉ என்பன.

உலகிலுள்ள உயிர்கள் எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதம் என்ப. அவ் யோனிபேதமெல்லா மொழித்து மனித்தப் பிறவி பெறுவது கடலைக் கையால் நீந்தின தொக்கும். இப் பிறவியும் கருவினுட்கழிவ சில, கழிந்திடாதழிவ சில, பரிணமித்துப் பாறுவ சில, பாலனாய்ப்படுவ சில, தருணனாய்த் தேய்வ சில, நரைத்து நகர்வ சில. ஆகவே, உருவமே நிலையாமை என்பது நினைக்கற் பாற்று. "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கூனமில்லை கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்கா," என்றிருத்தலான் கடவூர்ப் பெருமானை இத் திருப் பாசுரங்களால் வாயார வாழ்த்தினால் இயமவாதனையைக் கடந்து இறவாத இன்ப அன்பைப் பெறுவர் என்பது திண்ணம்.

இந்நூல் பல்லாற்றானும் பல அறங்களியற்றிப் பெரும் புகழ் படைத்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் பரிபூரண முதலாண்டு நிறைவு நாளாகிய இன்று அவர்கள் ஞாபகார்த்தமாக வெளியிடலாயிற்று.

இத் தொண்டை யாற்றும்படி எளியேனுக்குப் பணித்தருளிய ஸ்ரீ காசிமடத்துத் தலைவரவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் திருவடிகட்குஎன் மனமார்ந்த வணக்கம் உரித்தாகுக.

ஆசையறுய் பாசம்விடா யானசிவ பூசைபண்ணுய்
நேசமுட னைந்தெழுத்தை நீ நினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்
செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

இங்ஙனம்,
அடிமை
ந. இராமலிங்கம்.

தாருண ஹு பங்குனிமீ உஉ (15—3—1945).

குறிப்பு :—திருக்கடவூர் என்பது தஞ்சை ஜில்லாவில் காவிரியின் தென்கரையில் மாயூரம் தரங்கம்பாடி இருப்புப்பாதையி லுள்ளது. இத் தலத்தின் ஆலயம் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன பரிபாலனத்திலுள்ளகோயில்களி லொன்று.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்த் திருமுறைத் திரட்டு.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

முதற் றிருமுறை.

திருப்புகலி. பண்—தக்க ராகம்.

1. விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே. க

திருவெங்குரு. பண்—குறிஞ்சி.

2. காலைநன்மாமலர் கொண்டடிபரவிக்
கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமிடமுன் னுயிரொடுமாள
வுதைத்தவனுமையவள் விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக வோதம்வந்துலவி
மறிதிரைசங்கொடு பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே. க

திருப்பிரமபுரம். பண்—வியாழக்குறிஞ்சி.

3. மறுத்தவர் திரிபுர மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவ னிருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. அ

சீகாழி. பண்—குறிஞ்சி.

4. ஆலக் கோலத்தி னஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் றன்மையாற்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தாற்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. ரு

திருக்கோலக்கா. பண்—தக்க ராகம்.

5. நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்

கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. ௬

திருநின்றியூர். பண்—நட்டபாடை.

6. சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடுநீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலினொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலையோர்க்கே. ௧

திருநெடுங்களம். பண்—பழந்தக்க ராகம்

7. நின்னடியே வழிபடுவா னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. ௩

திருப்புள்ளமங்கை. பண்—நட்ட பாடை.

8. பாலுந்துறு திரளாயின பரமன்பிரமன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிற லறச்சாடிய கடவுள்ளிடங்கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினைதானே. ௧

திருப்பாம்புரம். பண்—தக்க ராகம்.

9. மாலினுக்கன்று சக்கரமீந்து மலரவற்கொருமுக மொழித்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி யனலதுவாடுமெம் மடிகள்
காலனைக்காய்ந்து தங்கழலடியாற் காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தவெம்மடிகள் பாம்புர நன்னகராரே. ௭

திருச்சிவபுரம். பண்—வியாழக்குறிஞ்சி.

10. அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிட வுதைசெய்த புனிதனகர்
வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே. ௨

திருக்கோளிலி. பண்—பழந்தக்க ராகம்.

11. நன்றுநகு நாண்மலரா னல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்ற னோங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங் கோளிலியெம் பெருமானே. ௩

திருவாலவாய். பண்—குறிஞ்சி.

12. ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. ௩

திருச்சோபுரம். பண்—பழந்தக்க ராகம்.

13. நாற்றமிக்க கொன்றைதுன்று செஞ்சடைமேன் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த காரணமென் னைகொலாம்
ஊற்றமிக்க காலன்றன்னை யொல்கவுதைத் தருளித்
தோற்றமீறு மாகிநின்றாய் சோபுரமே யவனே. ௫

திருக்கச்சியேகம்பம். பண்—மேகராகக்குறிஞ்சி.

14. தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற் சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற் கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த விடர்கெடுமே. ௪

திருவல்லம். பண்—வியாழக் குறிஞ்சி.

15. பதைத்தெழு காலனைப் பாத மொன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மை நின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவ னுறைவிடந் திருவல்லமே. ௬

திருவாலங்காடு. பண்—தக்க ராகம்.

16. பாலமதிசென்னி படரச்சூடி பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய கருத்தனார்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி மடமஞ்ஞை
ஆலும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௪

திருவிடைச்சுரம். பண்—குறிஞ்சி.

17. ஆற்றையுமேற்றதோ ரவிர்சடையுடைய
ரழகினையருளுவர் குழகலதறியார்
கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர்
நடுவிருளாடுவர் கொன்றையந்தாரார்
சேற்றயன்மிளிர்வன கயலிளவாளை
செருச்செயவோர்ப்பன செம்முகமந்தி
ஏற்றையொடுழிதரு மெழிறிகழ்சார
விடைச்சுரமேவிய விவர்வணமென்னே. ௨

திருக்கயிலாயம். பண்—தக்கேசி.

18. தொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமே லெரியொண்பகழியார்
எடுத்தான்றிரடோண் முடிகள்பத்து மிடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக் குறுகிவருங்கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார் கயிலைமலையாரே. ௮

இரண்டாந் திருமுறை.

திருவெண்காடு. பண்—சீகாமரம்.

1. வேலைமலி தண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே. ௫

திருப்பிரமபுரம். பண்—காந்தாரம்.

2. பன்றியின் கொம்பிலர் போலும் பார்த்தற் கருளிலர் போலுங்
கன்றிய காலனை வீழக் கால்கொடு பாய்ந்திலர் போலுந்
துன்று பிணஞ்சுடு காட்டி லாடித் துதைந்திலர் போலும்
பின்றியும் பீடும் பெருகும் பிரம புரமமர்ந் தாரே. ௭

திருச்சிரபுரம். பண்—நட்டராகம்.

3. மாணி தன்னுயிர் மதித்துண வந்தவக்
காலனை யுதைசெய்தார்
பேணி யுள்குமெய் யடியவர் பெருந்துயர்ப்
பிணக்கறுத் தருள்செய்வார்
வேணி வெண்பிறை யுடையவர் வியன்புகழ்ச்
சிரபுரத் தமர்கின்ற
ஆணிப் பொன்னினை யடிதொழு மடியவர்க்
கருவினை யடையாவே. ௪

சீகாழி. பண்—சீகாமரம்.

4. மலிக டுந்திரை மேனி மிர்ங்கெதிர்
வந்து வந்தொளிர் நித்தி லம்விழக்
கலிக டந்தகையார் மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணித
னின்னு யிரளித் தானை வாழ்த்திட
மெலியுந் தீவினைநோ யவைமேவுவர் வீடே. ௫

திருப்பிரமபுரம். பண்—காந்தாரம்.

5. காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர்
கழுமலமாத் தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங் குருப்புகலி யிந்திரனூ
ரிருங்கமலத் தயனூரின்பம்
வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரம்பூந்
தராய்கொச்சை காழிசண்பை
சேர்ந்தனமுன் பயந்துலகிற் றேவர்கடம்
பகைகெடுத்தோன் றிகழுமூரே. ௬

திருமழபாடி. பண்—இந்தளம்.

6. ஆல முண்டமு தம்மம ரர்க்கரு ளண்ணலார்
காலனா ருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத் தார்களுஞ் சார்விடம்
மால யன்வணங் கும்மழ பாடியெம் மைந்தனே. ௬

திருவானைக்கா. பண்—இந்தளம்.

7. காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய்யா டியபால் வணனே
வேலா டுகையா யெம்வெண்ணா வலுளாய்
ஆலார் நிழலா யெனுமா யிழையே. ௫

திருநள்ளாறு. திருவிராகம்-பண்—இந்தளம்.

8. பாலனடி பேணவவ னாருயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தவர னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாவின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே. ௬

திருக்கோட்டாறு. பண்—சீகாமரம்.

9. கால னைக்கழ லாலு தைத்தொரு
காம னைக்கன லாகச் சீறிமெய்
கோல வார்குழ லாள்குடிகொண்ட கோட்டாற்றில்
மூல னைம்முடி வொன்றி லாதவெம்
முத்த னைப்பயில் பந்தன் சொல்லிய
மாலை பத்தும்வல்லார்க் கெளிதாகும் வானகமே. ௧௧

திருவாஞ்சியம். பண்—இந்தளம்.

10. கால்கா லர்கரி கானிடை மாநட மாடுவர்
மேலர்வே லைவிட முண்டிருள் கின்றமி டற்றினர்
மாலைகோ லமதி மாடமன் னுந்திரு வாஞ்சியம்
ஞாலம்வந் துபணி யப்பொலி கோயில மர்ந்ததே. ௨

திருவெண்ணியூர் பண்—இந்தளம்.

11. காய்ந்தானைக் காமனை யுஞ்செறு காலனைப்
பாய்ந்தானைப் பரியகை மாவுரித் தோன்மெய்யில்
மேய்ந்தானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
நீந்தானை நினையவல் லார்வினை நில்லாவே. ௭

திருக்காறாயில். பண்—இந்தளம்.

12. கடுத்தானே காலனைக் காலாற் கயிலாயம்
எடுத்தானை யேதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானே கேழ்கிள ருந்திருக் காறாயில்
அடுத்தானே யென்பவர் மேல்வினை யடராவே. ௮

திருக்குறும்பலா. பண்—காந்தாரம்.

13. பால்வெண் மதிசூடிப் பாகத்தோர் பெண்கலந்து பாடியாடிக்
கால னுடல்கிழியக் காய்ந்தா ரிடம்போலுங் கல்சூழ்வெற்பில்
நீல மலர்க்குவளை கண்டிறக்க வண்டாற்று நெடுந்தண்சாரல்
கோல மடமஞ்ஞை பேடையொ டாட்டயருங் குறும்பலாவே. ச

திருக்கோவலூர் வீரட்டம். திருவிராகம், பண்—நட்டராகம்.

14. படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே. க

திருவரசிலி. பண்—பியந்தைக்காந்தாரம்.

15. மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை யுண்பது பொன்றிகழ் கொன்றை
தக்க நூறிகழ் மார்பிற் றவளவெண் ணீறணிந் தாமை
அக்கி னாரமும் பூண்ட வடிகளுக் கிடமர சிலியே. ச

திருவிரும்பைமாகாளம். பண்—செவ்வழி.

16. அட்டகாலன் றனைவவ் வினானவ் வரக்கன்முடி
எட்டுமற்று மிருபத்திரண் டும்மிற வூன்றினான்
இட்டமாக விருப்பா னவன்போ லிரும்பை தனுள்
மட்டுவார்ந்த பொழில்சூழ்ந் தெழிலாரு மாகாளமே. அ

திருவிந்திரநீலப்பருப்பதம். பண்—இந்தளம்.

17. கொடிய வேற்றினர் கூற்று தைத்தவர்
பொடிகொண் மேனியிற் பூண்ட பாம்பினர்
அடிக ளிந்திர நீலப் பர்ப்பதம்
உடைய வாண ருகந்த கொள்கையே. எ

பொது. பண்—பியந்தைக்காந்தாரம்.

18. மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களான பலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே. ரு

மூன்றாந் திருமுறை.

திருக்கழிப்பாலை. பண்—கௌசிகம்.

1. கொடிகொ ளேற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொண் மார்பினிற் பூண்டதொ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன வார்க்கறி வொண்ணுமே. ௫

திருப்பிரமபுரம். பண்—பஞ்சமம்.

2. மாணியை நாடுகாலன் னுயிர் மாய்தரச் செற்றுக்காளி
காணிய வாடல்கொண்டான் கலந் தூர்வழி சென்றுபிச்சை
ஊணியல் பாகக்கொண்டங் குடனேயுமை நங்கையொடும்
பேணிய கோயின்மன்னும் பிரமாபுரம் பேணுமினே. ௫

நாலடிமேல்வைப்பு.

திருப்புகலி பண்—காந்தார பஞ்சமம்.

3. பாடினை யருமறை வான்முறையால்
ஆடினை காணமுன் னருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேயடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி யருளெமக்கே. ௫

திருப்புகலி. பண்—காந்தார பஞ்சமம்.

4. சேர்ப்பது திண்சிலை மேவினா னுந்திகழ் பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத் தானும்வேள் விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங் கும்புக லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந் தபர மனன்றே. ௭

சீகாழி. பண்—கௌசிகம்.

5. காலன் றன்னுயிர் வீட்டு கழலடி
மாலு நான்முகன் றானும் வனப்புற
ஓல மிட்டுமுன் றேடி யுணர்கிலாச்
சீலங் கொண்டவ னூர்திகழ் காழியே. ௬

திருக்கோச்சைவயம். பண்—சாதாரி.

6. காய்ந்துதங் காலினாற் காலனைச் செற்றவர் கடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண் டிடமென விருந்தநல் லடிகளை யாதரித்தே
ஏய்ந்ததொல் புகழ்மிகு மெழின்மறை ஞானசம் பந்தன்சொன்ன
வாய்ந்தவிம் மாலைகள் வல்லவர் நல்லவா னுலகின் மேலே. ௧௧

திருக்கழுமலம். திருவியமகம், பண்-பழம்பஞ்சுரம்.

7. காதம ரத்திகழ் தோடினனே
கானவ னுய்க்கடி தோடினனே
பாதம தாற்கூற் றுதைத்தனனே
பார்த்த னுடலம் புதைத்தனனே
தாதவிழ் கொன்றை தரித்தனனே
சார்ந்தவி னையத ரித்தனனே
போத மமரு முரைப்பொருளே
புகலிய மர்ந்த பரம்பொருளே. ௩

திருப்பந்தணைநல்லூர். பண்—புறநீர்மை.

8. இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. க

திருமழபாடி. பண்—கொல்லி.

9. பாலனா ராருயிர் பாங்கினா லுணவரும்
காலனா ருயிர்செகக் காலினாற் சாடினான்
சேலினார் கண்ணினா டன்னொடுஞ் சேர்விடம்
மாலினார் வழிபடு மாமழ பாடியே. சா

திருக்கடவூர் வீரட்டம். பண்-கந்தாரபஞ்சமம்.

10. எரிதரு வார்சடை யானும்வெள் ளையெரு தேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந் தேத்தவே
கரிதரு காலனைச் சாடினா னுங்கட வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தர னல்லனே. உ

திருவீழிமிழலை. பண்—காந்தாரபஞ்சமம்.

11. எடுத்தவன் மாமலைக் கீழவி ராவணன் வீழ்தர
விடுத்தருள் செய்திசை கேட்டவர் வீழிமி ழலையார்
படுத்துவெங் காலனைப் பால்வழி பாடுசெய் பாலற்குக்
கொடுத்தன ரின்பங்கொ டுப்பர் தொழக்குறை வில்லையே. அ

திருவிளமர். திருவிராகம். பண்—சாதாரி.

12. தொண்டசை யுறவரு துயருறு காலனை மாள்வுற
அண்டல்செய் திருவரை வெருவுற வாரழ லாயினார்

கொண்டல்செய் தருதிரு மிடறின ரிடமெனி லளியினம்
விண்டிசை யுறுமலர் நறுமது விரிபொழில் விளமரே. ௬

திருவெண்டுறை. பண்—பஞ்சமம்

13. காலனை யோருதையில் லுயிர் வீடுசெய் வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின் றாடிய பண்டரங்கன்
மாலைம தியொடுநீ ரர வம்புனை வார்சடையான்
வேலன கண்ணியொடும் விரும் புமிடம் வெண்டுறையே. ௨

" " "

14. கன் றிய காலனையுங் குரு ளக்கனல் வாயலறிப்
பொன்றமு னின்றபிரான் பொடி யாடிய மேனியினான்
சென் றிமை யோர்பரவுந் திகழ் சேவடி யான்புலன்கள்
வென்றவ னெம்மிறைவன் விரும் பும்மிடம் வெண்டுறையே. ௭

திருக்கோள்ளிக்காடு. பண்-காந்தார பஞ்சமம்.

15. ஆற்றநல் லடியிணை யலர்கொண் டேத்துவான்
சாற்றிய வந்தணன் றகுதி கண்டநாள்
மாற்றல னாகிமுன் னடர்த்து வந்தணை
கூற்றினை யுதைத்தனர் கொள்ளிக் காடரே. ௨

திருவக்கரை. பண்—பஞ்சமம்.

16. பாய்ந்தவன் காலனைமுன் பணைத் தோளியொர் பாகமதா
ஏய்ந்தவ னெண்ணிறந்தவ் விமை யோர்களொ டேத்திறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்க ளெரி செய்தவன் வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறைசேர் சடை யானடி செப்புதுமே. ௨

பொது. பண்—காந்தாரபஞ்சமம்.

17. துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே. ௧

" "

18. நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே. ௪

பொது. பண்—கொல்லி.

19. கூற்றுதைத்த, நீற்றினானைப்
போற்றுவார்கள், தோற்றினாரே. ௯

போது. பண் — கௌசிகம்.

20. இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. ச

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

நான்காந் திருமுறை.

கோயில். திருநேரிசை. பண் — கொல்லி.

1. பாலனாய் விருத்த னாகிப் பனிநிலா வெறிக்குஞ் சென்னிக்
காலனைக் காலாற் காய்ந்த கடவுளார் விடையொன் றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. க0

கோயில். திருவிருத்தம். பண் — கொல்லி

2. ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்க டில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே. உ

ஷை ஷை

3. சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட்கொண்டதே. க0

திருக்கழிப்பாலை. திருநேரிசை.

4. சதுர்முகன் றானுமாலுந் தம்மிலே மிகலைக்கண்டு
எதிர்முக மின்றிநின்ற வெரியுரு வதனைவைத்தார்
பிதிர்முகன் காலன் றன்னைக் காலினிற் பிதிரவைத்தார்
கதிர்முகஞ் சடையில்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. சு

திருச்சாய்க்காடு. திருநேரிசை.

5. தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநா ளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செல்லுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடு மேவினாரே. க

திருக்குறுக்கை வீரட்டம். திருநேரிசை.

6. நீற்றினை நிறையப்பூசி நித்தலு நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு மந்தணனாரைக் கொல்வான்

சாற்றுநா ளற்றதென்று தருமரா சற்காய்வந்த
கூற்றினைக் குமைப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே. ௨

திருக்கோடிகா. திருநேரிசை.

7. காலனைக் காலாற்செற்றன் றருள்புரி கருணையானே
நீலமார் கண்டத்தானே நீண்முடி யமரர் கோவே
ஞாலமாம் பெருமையானே நளிரிளந் திங்கள்சூடும்
கோலமார் சடையினானே கோடிகா வுடையகோவே. ௪

திருவின்னம்பர். திருநேரிசை.

8. விடமலி கண்டர்போலும் வேள்வியை யழிப்பர்போலும்
கடவுநல் விடையர்போலுங் காலனைக் காய்வர்போலும்
படமலி யரவர்போலும் பாய்புலித் தோலர்போலும்
இடர்களைந் தருள்வர்போலு மின்னம்ப ரீசனாரே. ௪

திருவின்னம்பர். திருவிருத்தம்

9. பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம்பங் கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன சீர்மறையோன்
உய்தற் பொருட்டுவெங் கூற்றை யுதைத்தன வும்பர்க்கெல்லாம்
எய்தற் கரியன வின்னம்ப ரான்ற னிணையடியே. ௨

திருப்பழனம். திருநேரிசை.

10. ஆலின்கீ ழறங்களெல்லா மன்றவர்க் கருளிச்செய்து
நூலின்கீ ழவர்கட்கெல்லா நுண்பொரு ளாகிநின்று
காலின்கீழ்க் காலன்றன்னைக் கடிகத்தான் பாய்ந்துபின்னும்
பாலின்கீழ் நெய்யுமானார் பழனத்தெம் பரமனாரே. ௬

" "

11. காற்றனாற் காலற்காய்ந்து காருரி போர்த்தவீசர்
தோற்றனாற் கடலுணஞ்சைத் தோடுடைக் காதர்சோதி
ஏற்றினா ரிளவெண்டிங்க ளிரும்பொழில் சூழ்ந்தகாயம்
பாற்றினார் வினைகளெல்லாம் பழனத்தெம் பரமனாரே. ௮

திருப்பழனம். திருவிருத்தம்.

12. ஏய்ந்தறுத் தாயின்ப னுயிருந் தேபடைத் தான்றலையைக்
காய்ந்தறுத் தாய்கண்ணி னாலன்று காமனைக் காலனையும்
பாய்ந்தறுத் தாய்பழ னந்தர சேயென் பழவினைநோய்
ஆய்ந்தறுத் தாயடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. ௬

திருவையாறு. திருவிருத்தம்.

13. இழித்தன வேழேழ் பிறப்பு மறுத்தன வென்மனத்தே
பொழிந்தன பேரொழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்காய்க்

கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழ்முன்சென்
றழித்தன வாறங்க மானவை யாற னடித்தலமே. ௨

,, திருக்குறுந்தொகை.

14. சிந்தை வண்ணமுந் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்ததோர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. ௩

திருநெய்த்தானம். திருநேரிசை.

15. காலனை வீழச்செற்ற கழலடி யிரண்டும்வந்தென்
மேலவா யிருக்கப்பெற்றேன் மேதகத் தோன்றுகின்ற
கோலநெய்த் தானமென்னுங் குளிர்பொழிற் கோயின்மேய
நீலம்வைத் தனையகண்ட நினைக்குமா நினைக்கின்றேனே. ௧

திருச்சோற்றுத்துறை. திருவிருத்தம்.

16. கூற்றைக் கடந்ததுங் கோளர வார்த்ததுங் கோளுழுவை
நீற்றிற் றுதைந்து திரியும் பரிசது நாமறியோம்
ஆற்றிற் கிடந்தங் கலைப்ப வலைப்புண் டசைந்தொதுக்கும்
சோற்றுத் துறையுறை வார்சடை மேலதோர் தூமதியே. ௫

திருச்சத்திமுற்றம். திருவிருத்தம்.

17. காய்ந்தா யனங்க னுடலம் பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தா யுயிர்செகப் பாதம் பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பா யடியேற் கருளாயுன் னன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. ௨

திருக்கடவூர் வீரட்டம். திருநேரிசை.

18. மண்ணிடைக் குரம்பைதன்னை மதித்துநீர் மையமெய்தில்
விண்ணிடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவாரார்
பண்ணிடைச் சுவைகள்பாடி யாடிடும் பத்தர்க்கென்றும்
கண்ணிடை மணியர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே. ௨

19. தலக்கமே செய்துவாழ்ந்து தக்கவா றொன்றுமின்றி
விலக்குவா ரிலாமையாலே விளக்கத்திற் கோழிபோன்றேன்
மலக்குவார் மனத்தினுள்ளே காலனார் தமர்கள்வந்து
கலக்கநான் கலக்குகின்றேன் கடவூர்வீ ரட்டனீரே. ௫

20. சேவினை ரனையகண்ணார் திறம்விட்டுச் சிவனுக்கன்பாய்ப்
பாலுநற் றயிர்நெய்யோடு பலபல வாட்டியென்றும்
மாலினைத் தவிரநின்ற மார்க்கண்டற் காகவன்று
காலனை யுதைப்பர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே. ௬

,, திருவிருத்தம்.

21. மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்கனே
உருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே. க

22. பதத்தெழு மந்திர மஞ்செழுத் தோதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணித னின்னுயி ருண்ணவெ குண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன லாறொழுக
உதைத்தெழு சேவடி யான்கட வூருறை யுத்தமனே. உ

23. கரப்புறு சிந்தையர் காண்டற் கரியவன் காமனையும்
நெருப்புமிழ் கண்ணின னீள்புனற் கங்கையும் பொங்கரவும்
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன் காலனைப் பண்டொருகால்
உரப்பிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே. ௩

24. மறித்திகழ் கையினன் வானவர் கோனை மனமகிழ்ந்து
குறித்தெழு மாணித னாருயிர் கொள்வான் கொதித்தசிந்தைக்
கறுத்தெழு மூவிலை வேலுடைக் காலனைத் தானலற
உறுக்கிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே. ௪

25. குழைத்திகழ் காதினன் வானவர் கோனைக் குளிர்ந்தெழுந்து
பழக்கமொ டர்ச்சித்த மாணித னாருயிர் கொள்ளவந்த
தழற்பொதி மூவிலை வேலுடைக் காலனைத் தானலற
உழக்கிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே. ௫

26. பாலனுக் காயன் றுபாற்கட லீந்து பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரண மோதி யருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்தபி ரான்கட வூருறை யுத்தமனே. ௬

27. படர்சடைக் கொன்றையும் பன்னக மாலை பணிகயிறு
உடைதலை கோத்துழன் மேனிய னுண்பலிக் கென்றுழல்வோன்
சுடர்பொதி மூவிலை வேலுடைக் காலனைத் துண்டமதா
உடறிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே. ௭

28. வெண்டலை மாலையுங் கங்கை கரோடி விரிசடைமேல்
பெண்டணி நாயகன் பேயுகந் தாடும் பெருந்தகையான்
கண்டணி நெற்றியன் காலனைக் காய்ந்து கடலின்விடம்
உண்டருள் செய்தபி ரான்கட வூருறை யுத்தமனே. ௮

29. கேழல தாகிக் கிளறிய கேசவன் காண்பரிதாய்
வாழிநன் மாமலர்க் கண்ணிடந் திட்டவம் மாலவற்கன்

ரூழியு மீந்து வடுதிறற் காலனை யன்றடர்த்து
ஊழியு மாயபி ரான்சட ஆருறை யுத்தமனே. ௯

திருவாரூர். பழமொழி. பண்—காந்தாரம்.

30. ஒட்டாத வாளவுணர் புரமூன்று மோரம்பின் வாயின் வீழக்
கட்டானைக் காமனையுங் காலனையுங் கண்ணினொடு காலின்வீழ
அட்டானை யாரூரி லம்மானை யார்வச்செற் றக்குரோதம் [௯
தட்டானைச் சாராதே தவமிருக்க வவஞ்செய்து தருக்கினேனே.

திருமாற்பேறு. திருவிருத்தம்.

31. மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்ட தொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன பேர்த்துமஃதே
மாணிக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே. ௧

திருவாலங்காடு. திருநேரிசை.

32. தாளுடைச் செங்கமலத் தடங்கொள்சே வடியர்போலும்
நாளுடைக் காலன்வீழ வுதைசெய்த நம்பர்போலும்
கோளுடைப் பிறவிதீர்ப்பார் குளிர்பொழிற் பழனமேய
ஆளுடை யண்ணல்போலு மாலங்காட் டடிகளாரே. ௭

போது. தசபுராணம். பண்—பழம்பஞ்சுரம்.

33. நீலநன் மேனிசெங்கண் வளைவெள்ளெயிற்ற
னெரிகேச னேடிவருநாள்
காலைநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு
மளவின்கண் வந்து குறுகிப்
பாலனை யோடவோடப் பயமெய் துவித்த
வுயிர்வவ்வுபாசர் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலு மண்டர்
தொழுதோது சூடுகழலே ௬

போது. நினைந்த திருநேரிசை.

34. கூற்றினை யுதைத்தபாதக் குழகனை மழலைவெள்ளே
றேற்றனை யிமையோரேத்த விருஞ்சடைக் கற்றைதன்மேல்
ஆற்றனை யடியரேத்து மமுதனை யமுதயோக
நீற்றனை நினைந்தநெஞ்ச நேர்பட நினைந்தவாறே. ௫

போது. தனித் திருநேரிசை.

35. நடுவிலாக் காலன்வந்து நணுகும்போ தறியவொண்ணா
அடுவன வஞ்சுபூத மவைதமக் காற்றலாகேன்
படுவன பலவுங்குற்றம் பாங்கிலா மனிதர்வாழ்க்கை
கெடுவதிப் பிறவிசீசீ கிளரொளிச் சடையினீரே. ௧௦

போது. ஆருயிர்த் திருவிருத்தம்.

36. காய்ந்தான் செறற்கரி யானென்று காலனைக் காலொன்றினால்
பாய்ந்தான் பணைமதில் மூன்றுங் கணையொன்று மொள்ளழலால்
மேய்ந்தான் வியனுல கேழும் விளங்க விழுமியநூல்
ஆய்ந்தா னடிநிழற் கீழதன றோவென்ற னாருயிரே. ௫

போது. தனித் திருவிருத்தம்.

37. மேலு மறிந்தில னான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே. ௧௧

ஐந்தாந் திருமுறை.

கோயில். திருக்குறுந்தொகை.

1. சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. ௬

திருப்புள்ளிருக்குவேளூர். திருக்குறுந்தொகை.

2. மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே. ௨

திருநின்றியூர். திருக்குறுந்தொகை.

3. கொடுங்கண் வெண்டலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே. ௧

திருக்குரக்குக்கா. திருக்குறுந்தொகை.

4. ஆல நீழ லமர்ந்த வழகனார்
கால னையுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைக ளாலுங் குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர் பரிவோடே. ௭

திருவாட்போக்கி. திருக்குறுந்தொகை.

5. கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்

ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையு ணிற்பரே. க

6. விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கியை
எடுத்து மேத்தியு மின்புறு மின்களே. உ

7. வந்திவ் வாறு வளைத்தெழு தூதுவர்
உந்தி யோடி நரகத் திடாமுனம்
அந்தி யின்னொளி தாங்கும்வாட் போக்கியார்
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரே. ௩

8. கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கியால்
ஏற்று மின்விளக் கையிரு ணீங்கவே. ச

9. மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னம்
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்
கூறி யூறி யுருகுமென் னுள்ளமே. ரு

10. கான மோடிக் கடிதெழு தூதுவர்
தான மோடு தலைபிடி யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையி னிற்பரே. சா

11. பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே. எ

12. நாடி வந்து நமன்றமர் நல்லிருள்
கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாட லுகந்தவாட் போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் தவிருமே. அ

13. கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி யிணையடி யேத்துமே. கூ

14. இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே

அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே. ௧0

திருப்பூந்துருத்தி. திருக்குறுந்தொகை.

15. மூவ னுய்முத லாயிவ் வுலகெலாம்
காவ னுய்க்கடுங் காலனைக் காய்ந்தவன்
பூவி னுயகன் பூந்துருத் திந்நகர்த்
தேவன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. ௬

திருப்பழையாறைவடதளி. திருக்குறுந்தொகை.

16. ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே. ௮

திருதென்குரங்காடுதுறை. திருக்குறுந்தொகை.

17. ஞாலத் தார் தொழு தேத்திய நன்மையன்
காலத் தானுயிர் போக்கிய காலினான்
நீலத் தார்மிட றன்வெள்ளை நீறனே
கோலத் தான்குரங் காடு துறையனே. ௫

திருநல்லம். திருக்குறுந்தொகை.

18. கொல்லத் தானம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதே னேழைகாள்
நல்லத் தானமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வலி போற்றுயர் தீருமே. ௧

திருக்கடவூர்வீரட்டம். திருக்குறுந்தொகை.

19. விடுத்த மால்வரை விண்ணுற வானையார்
தொடுத்த மால்வரை தூயதொ ரானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுத்த வானைகண் டார்கட வூரரே. ௬

20. அடுத்து வந்த விலங்கையர் மன்னனை
எடுத்த தோள்க ளிறநெரித் தானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுக்கை யானைகண் டார்கட வூரரே. ௧௧

திருக்கடவூர்மயானம். திருக்குறுந்தொகை.

21. சூல மேந்துவர் தோலுடை யாடையர்
ஆல முண்டமு தேமிகத் தேக்குவர்
கால காலர் கடவூர் மயானத்தார்
மாலை மார்பர் பெருமா னடிகளே. ௯

திருக்கருவிலிக்கோட்டிட்டை. திருக்குறுந்தொகை.

22. ஞால மல்கு மனிதர்கா ணாடொறும்
ஏல மாமல ரோடிலை கொண்டுநீர்
கால னார்வரு தன்முன் கருவிலிக்
கோல வார்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. ௨

திருவெண்ணியூர். திருக்குறுந்தொகை.

23. காற்றி னைக்கன லைக்கதிர் மாமணி
நீற்றி னைநினைப் பார்வினை நீக்கிடும்
கூற்றி னையுதைத் திட்ட குணமுடை
வீற்றி னைநெரு நற்கண்ட வெண்ணியே. ௩

திருவண்ணாமலை. திருக்குறுந்தொகை.

24. கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மே வினைகளே. ௮

திருமாற்பேறு. திருக்குறுந்தொகை.

25. சாற்றிச் சொல்லுவன் கேண்மின் றரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழ லேத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம் பொனாவர் மாற்பேறரே. ௫

26. ஈட்டு மாநிதி சால விழக்கினும்
வீட்டுங் காலன் விரைய வழைக்கினும்
காட்டின் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மாற் பேறரே. ௬

பொது. தனித்திருக்குறுந்தொகை.

27. கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னாமுளோம்
எற்றுக் கோநம னான்முனி வுண்பதே. ௬

பொது. காலபாசத் திருக்குறுந்தொகை.

28. கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. ௧

29. நடுக்கத் துள்ளு நகையுளு நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க வெனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே. ௨

30. கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொ ணாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகினு மாக வவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே. ௩

31. சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. ௪

32. இறையென் சொன்மற வேனமன் றூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்றமர்
நறவ நாறிய நன்னறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே. ௫

33. வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமந் தூபமுந் தண்ணறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே. ௬

34. படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்னம தீச னடியரை
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. ௭

35. விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்ச னீறணி வாரை நினைப்பதே
அச்ச மெய்தி யருகணை யாதுநீர்
பிச்சை புக்கவ னன்பரைப் பேணுமே. ௮

36. இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய
மன்னன் பாத மனத்துட னேத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே. ௯

37. மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்

ஒற்றை யேறுடை யானடி யேயலால்
பற்றொன் றில்லிகண் மேற்படை போகலே. ௧0

38. அரக்க னீரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றியிட் டான்றமர் நிற்கிலும்
சுருக்கெ னாதங்குப் போமின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே. ௧௧

ஆறாந் திருமுறை.

திருச்சாய்க்காடு. திருத்தாண்டகம்.

1. கார்மல்கு கொன்றையந் தாரார் போலுங்
காலனையு மோருதையாற் கண்டார் போலும்
பார்மல்கி யேத்தப் படுவார் போலும்
பருப்பதத்தே பல்லூழி நின்றார் போலும்
ஊர்மல்கு பிச்சைக் குழன்றார் போலு
மோத்தூ ரொருநாளு நீங்கார் போலுஞ்
சீர்மல்கு பாட லுகந்தார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. ௫

2. மாவாய்ப் பிளந்துகந்த மாலுஞ் செய்ய
மலரவனுந் தாமேயாய் நின்றார் போலும்
மூவாத மேனி முதல்வர் போலு
முதுகுன்ற மூதூ ருடையார் போலுங்
கோவாய முனிதன்மேல் வந்த கூற்றைக்
குரைகழலா லன்று குமைத்தார் போலுந்
தேவாதி தேவர்க் கரியார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. ௬

திருச்செங்காட்டங்குடி. திருத்தாண்டகம்.

3. சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்றன்னைத் தேவ தேவைக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட வச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை யிறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. ௨

திருநாரையூர். திருத்தாண்டகம்.

4. மீளாத வாளென்னை யுடையான் றன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள வுதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
றோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. ௧0

திருவின்னம்பர். திருத்தாண்டகம்.

5. தொண்டர்கடந் தகவி னுள்ளார் போலுந்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றார் போலும்
பண்டிருவர் காணாப் படியார் போலும்
பத்தர்கடஞ் சித்தத் திருந்தார் போலும்
கண்ட மிறையே கறுத்தார் போலுங்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
இண்டைச் சடைசேர் முடியார் போலு
மின்னம்பர்த் தான்றோன்றி யீசனாரே, ௫

திருப்பழனம். திருத்தாண்டகம்.

6. அலையார் கடனஞ்ச முண்டார் தாமே
யமரர்களுக் கருள்செய்யு மாதி தாமே
கொலையாய கூற்ற முதைத்தார் தாமே
கொல்வேங்கைத் தோலொன் றசைத்தார் தாமே
சிலையாற் புரமூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை யாண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. ௧

திருமழபாடி. திருத்தாண்டகம்.

7. அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டா
யண்டத்துக் கப்பாலாய் நின்றான் கண்டாய்
கொலையான கூற்றங் குமைத்தான் கண்டாய்
கொல்வேங்கைத் தோலொன் றுடுத்தான் கண்டாய்
சிலையாற் றிரிபுரங்கள் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மலையார் மடந்தை மணாளன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. ௯

8. ஆலால முண்டுகந்த வாதி கண்டா
யடையலர்தம் புரமூன்று மெய்தான் கண்டாய்
காலாலக் காலனையுங் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்
பாலாரு மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலு மறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. ௯

திருவாலம்பொழில். திருத்தாண்டகம்.

9. உருமூன்றா யுணர்வின்க ணொன்றா னானை
யோங்கார மெய்ப்பொருளை யுடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் றன்னைக்
காலனைத் தன் கழலடியாற் காய்ந்து மாணிக்
கருளீன்ற வாரமுதை யமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமா னென்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. ௩

திருப்பூந்துருத்தி. திருத்தாண்டகம்.

10. குற்றாலங் கோகரண மேவி னானைக்
கொடுங்கைக் கடுங்கூற்றைப் பாய்ந்தான் றன்னை
உற்றால நஞ்சுண் டொடுக்கி னானை
யுணராவென் னெஞ்சை யுணர்வித் தானைப்
பற்றாலின் கீழங் கிருந்தான் றன்னைப்
பண்ணார்ந்த வீணை பயின்றான் றன்னைப்
புற்றா டரவார்த்த புனிதன் றன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டே னானே. ௨

திருச்சோற்றுத்துறை. திருத்தாண்டகம்.

11. தலையவனா யுலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
நிலையவனாய் நின்னொப்பா ரில்லா தானே
நின்றணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோன்மே லிட்ட
கூற்றுவனே கொடிமதில்கண் மூன்று மெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய னானே. ௨

திருக்கருகாவூர். திருத்தாண்டகம்.

12. பூத்தானாம் பூவி னிறத்தா னாமாம்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்ற
கோத்தானாங் கோல்வளையாள் கூற னாகுங்
கொண்ட சமயத்தார் தேவ னாகி
ஏத்தாதார்க் கென்று மிடரே துன்ப
மீவானா மென்னெஞ்சத் துள்ளே நின்று
காத்தானாங் கால னடையா வண்ணங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. ௫

13. இரவனா மெல்லி நடமா டியா
மெண்டிசைக்குந் தேவனா மென்னு ளானாம்
அரவனா மல்ல லறுப்பா னாமா
மாகாச மூர்த்தியா மானே றேறுங்
குரவனாங் கூற்றை யுதைத்தான் றானாங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றுங்
கரவனாங் காட்சிக் கெளியா னாமாங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. ௬

14. மூலனா மூர்த்தியா முன்னே தானா
மூவாத மேனிமுக் கண்ணி னானாஞ்
சீலனாஞ் சேர்ந்தா ரிடர்க டீர்க்குஞ்
செல்வனாஞ் செஞ்சுடர்க்கோர் சோதி தானாம்
மாலனா மங்கையோர் பங்க னாகு
மன்றாடி யாம்வானோர் தங்கட் கெல்லாங்
காலனாங் காலனைக் காய்ந்தா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. ௭

15. துடியாந் துடியின் முழக்கந் தானாஞ்
சொல்லுவார் சொல்லெல்லாஞ் சோதிப் பானாம்
படிதானாம் பாவ மறுப்பா னாகும்
பானீற் றானாம் பரஞ்சோதி தானாங்
கொடியானாங் கூற்றை யுதைத்தா னாகுங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றுங்
கடியானாங் காட்சிக் கரியா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. ௮

16. ஒறுத்தானு மொன்னார் புரங்கண் மூன்று
மொள்ளழலை மாட்டி யுடனே வைத்து
இறுத்தானு மெண்ணான் முடிகள் பத்து
மிசைந்தானு மின்னிசைகள் கேட்டா னாகும்
அறுத்தானு மஞ்சு மடக்கி யங்கே
யாகாச மந்திரமு மானா னாகும்
கறுத்தானுங் காலனைக் காலால் வீழக்
கண்ணானுங் கருகாவூ ரெந்தைதானே. ௧௧

திருநல்லூர். திருத்தாண்டகம்.

17. சென்றருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்
திசைபத்து மிருநிலத்திற் றிருந்த வைத்தார்
நின்றருளி யடியமரர் வணங்க வைத்தார்
நிறைதவமு மறைபொருளு நிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்ற நடுங்கி யோடக்
குரைகழற்சே வடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. ௬

திருவிடைமருதூர். திருத்தாண்டகம்.

18. தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆல மமுதாக வுண்டார் போலு
மடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலு
மிடைமருது மேவிய வீச னாரே. ௮

திருவலம்புரம். திருத்தாண்டகம்.

19. கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபா லியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறும்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வௌவ
மறித்தொருகா னோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. ௬

திருவாக்கூர். திருத்தாண்டகம்

20. மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலு
மான்றோ லுடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலுங்
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானந் தாட லுகப்பார் போலு
மாக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. எ

திருநள்ளாறு திருத்தாண்டகம்

21. குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக வவுணர்புர மூன்றும் வேவ
வாரழல்வா யோட்டி யடர்வித் தானைச்
சென்றாது வேண்டிற்றொன் றீவான் றன்னைச்
சிவனேயெம் பெருமானென் றிருப்பார்க் கென்றும்
நன்றாகு நம்பியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. கூ

திருவீழிமிழலை திருத்தாண்டகம்

22. சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் றன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் றன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. உ

திருவீழிமிழலை திருத்தாண்டகம்

23. நெய்யினொடு பாலிளநீ ராடி னான்கா
ணித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமா னேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னான்காண்
வெய்யகனல் விளையாட் டாடி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. ரு

திருவீழிமிழலை திருத்தாண்டகம்

24. சமரமிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலு
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலும்
குமரனையு மகனாக வுடையார் போலுங்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்களி னமுதுணநஞ் சுண்டார் போலு
மடியேனை யாளுடைய வடிக டாமே. ௨

திருப்பள்ளியின் முக்கூடல் திருத்தாண்டகம்

25. தடுத்தானைத் தான்முனிந்து தன்றோள் கொட்டித்
தடவரையை யிருபதுதோ டலையி னாலும்
எடுத்தானைத் தாள்விரலான் மாள வூன்றி
யெழுநரம்பி னிசைபாட வினிது கேட்டுக்
கொடுத்தானைப் பேரோடுங் கூர்வா ளன்னைக்
குரைகழலாற் கூற்றுவனை மாள வன்று
படுத்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே. ௧0

திருவாரூர் திருத்தாண்டகம்

26. தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
டமருலகந் தலைகலனாப் பலிகொள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்கா
ணவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணொடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
டிருவாரூ ரான்காணென் சிந்தை யானே. ௭

திருவாரூர் திருத்தாண்டகம்

27. நீற்றினையு நெற்றிமே லிட்டார் போலு
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையுங் கடிதாக நடந்தார் போலுங்
கண்ணின்மேற் கண்ணொன் றுடையார் போலும்
கூற்றினையுங் குரைகழலா லுதைத்தார் போலுங்
கொல்புலித்தோ லாடைக் குழகர் போலும்
ஆற்றினையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலு
மணியாரூர்த் திருமூலட் டான னாரே. ௧

திருவாரூர் திருத்தாண்டகம்

28. ஏற்றானை யேழுலகு மானான் றன்னை
யேழ்கடலு மேழ்மலையு மானான் றன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் றன்னைக்
கொடுமழுவாள் கொண்டதோர் கையான் றன்னைக்
காற்றானைத் தீயானை நீரு மாகிக்
கடிகமழும் புன்சடைமேற் கங்கை வெள்ள
ஆற்றானை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே. ௯

திருவாரூர் திருத்தாண்டகம்

29. ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
வோருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. ௧

திருவாரூரரநெறி திருத்தாண்டகம்

30. காலனைக்கா லாற்காய்ந்த கடவு டன்னைக்
காரோணங் கழிப்பாலை மேயான் றன்னைப்
பாலனுக்குப் பாற்கட லன் றீந்தான் றன்னைப்
பணியுகந்த வடியார்கட் கினியான் றன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலட் டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீன்ற
ஆலவனை யரநெறியி லப்பன் றன்னை
யடைந்தடியே னருவினைநோ யறுத்த வாறே. ௮

திருவெண்ணியூர் திருத்தாண்டகம்

31. மட்டிலங்கு கொன்றையந்தார் மாலை சூடி
மடவா ளவளோடு மானொன் றேந்திச்
சிட்டிலங்கு வேடத்த ராகி நாளுஞ்
சில்பலிக்கென் றாரூர் திரிதர் வாரும்
கட்டிலங்கு பாசத்தால் வீச வந்த
காலன்றன் கால மறுப்பார் தாமும்
விட்டிலங்கு வெண்குழைசேர் காதி னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. ௭

திருக்கன்றாப்பூர் திருத்தாண்டகம்

32. குனிந்தசிலை யாற்புரமூன் றெரித்தா னென்றுங்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியா னென்றுந்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தா னென்றுந்
தசக்கிரிவன் மலையெடுக்க விரலா லூன்றி
முனிந்தவன்றன் சிரம்பத்துந் தாளுந் தோளு
முரணழித்திட் டருள்கொடுத்த மூர்த்தி யென்றும்
கனிந்துமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. ௧௦

திருவலிவலம் திருத்தாண்டகம்

33. நிலையவன்காண் டோற்றவன்கா ணிறையா னான்கா
ணீரவன்காண் பாரவன்கா ணூர்மூன் றெய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தற்
றேன்மொழியை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் கயிலாய மென்னுந் தெய்வ
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. ௯

திருமறைக்காடு திருத்தாண்டகம்

34. கள்ளி முது காட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் றோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே. ௪

திருப்பூவணம் திருத்தாண்டகம்

35. கல்லாலி னீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் னடர்த்த றோன்று
மைவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. ௩

36. ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. கக

திருவதிகை வீரட்டானம் திருவடித்திருத்தாண்டகம்

37. கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தா ராழாமைக் காக்கு மடி
படுமுழவம் பாணி பயிற்று மடி
பதைத் தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருது மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தா னடி
நிறைகெடில வீரட்ட நீங்கா வடி. உ

திருமுண்டீச்சரம் திருத்தாண்டகம்

38. உற்றவன்கா ணுறவெல்லா மாவான் றான்கா
ணொழிவற நின்றெங்கு முலப்பி லான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணு மாகிப்
புறங்காட்டி லெரியாடல் புரிந்தான் றான்காண்
நற்றவன்கா ணடியடைந்த மாணிக் காக
நணுகியதோர் பெருங்கூற்றைச் சேவ டியினால்
செற்றவன்காண் டிருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. ௬

திருக்கச்சியேகம்பம் திருத்தாண்டகம்

39. கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தி னீரா னான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கு மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்கா ணிலாவூருஞ் சென்னி யான்கா
ணிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே. க

திருக்கச்சியேகம்பம் திருத்தாண்டகம்

40. ஆய்ந்தவன்கா ணருமறையோ டங்க மாறு
மணிந்தவன்கா ணாடரவோ டென்பு மாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காம னாகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகாற் பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே. ௯

திருப்பாசூர் திருத்தாண்டகம்

41. ஞாலத்தை யுண்ட திருமாலு மற்றை
நான்முகனு மறியாத நெறியான் கையிற்
சூலத்தா லந்தகனைச் சுருளக் கோத்துத்
தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல் செய்த
வந்தணனைக் கைக்கொண்ட செவ்வான் வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. ௬

திருக்கழுக்குன்றம் திருத்தாண்டகம்

42. பல்லாடு தலைசடைமே லுடையான் றன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன் றன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானான் றன்னைச்
சுடருருவி லென்பறாக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் னடர்த்தான் றன்னை
யாலின்கீ ழிருந்தானை யமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளுங் காபா லியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. ௨

ஸ்ரீகயிலாயம் போற்றித் திருத்தாண்டகம்

43. நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள வகல முடையாய் போற்றி
அடியு முடியு மிகலிப் போற்றி
யங்கொண் டறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி. ௧௦

ஸ்ரீகயிலாயம் போற்றித்திருத்தாண்டகம்

44. மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் றென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் றன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. ௰

பொது மறுமாற்றத்திருத்தாண்டகம்

45. நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே க

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

ஏழாந்திருமுறை

கோயில் பண்—குறிஞ்சி

1. மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரியபாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே. க

2. பேராது காமத்திற் சென்றார்போ லன்றியே பிரியாதுள்கிச்
சீரார்ந்த வன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுந் திருவினாரை
ஓராது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே. உ

3. நரியார்தங் கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து நாளுமுள்கிப்
பரியாத வன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுஞ் சிந்தையாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான் [ங
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

4. கருமையாற் றருமனார் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப்பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குந் திறைகொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

5. கருமானி னுரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக் கண்ணியானை
உருமன்ன கூற்றத்தை யுருண்டோட வுதைத்துகந்து வுலவாவின்பம்
தருவானைத் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே

6. கற்றானுங் குழையுமா றன்றியே கருதுமா கருதுகிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை யென்பர்கா ணுள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

7. நாடுடைய நாதன்பா னன்றென்றுஞ் செய்மனமே நம்மைநாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய சாக்கியர்க்கு மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

8 பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன் மீகொங்கி லணிகாஞ்சிவாய்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாமன்றே.

திருக்குருகாவூர் வெள்ளடை பண்—நட்டராகம்

9. மலக்கினின் னடியார்கள் மனத்திடை மாறீர்ப்பாய்
சலச்சல மிடுக்குடைய தருமனார் தமரென்னைக்
கலக்குவான் வந்தாலுங் கடுந்துயர் வாராமே
விலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. அ

திருக்கோலக்கா பண்—தக்கேசி

10. காற்றுத் தீப்புன லாகினின் றானைக்
கடவு ளைக்கொடு மால்விடை யானை
நீற்றுத் தீயுரு வாய்நிமிர்ந் தானை
நிரம்பு பல்கலை யின்பொரு ளாலே
போற்றித் தன்கழ றொழுமவ னுயிரைப்
போக்கு வானுயிர் நீக்கிடத் தாளாற்
கூற்றைத் தீங்குசெய் குரைகழ லானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. சா

திருப்புன்கூர் பண்—தக்கேசி

11. அந்தணாளனுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக

வந்த காலன்ற ஞுயி ரதனை
வவ்வி ஞய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. க

திருநீடூர் பண்—தக்கேசி

12. காடி லாடிய கண்ணுத லானைக்
காலனைக்கடிந் திட்டபி ரானைப்
பாடியா டும்பரி சேபுரிந் தானைப்
பற்றி னேற் சுற் றம்மொழிப் பானைத்
தேடி மாலயன் காண்பரி யானைச்
சித்த முந்தெளி வார்க்கெளி யானைக்
கோடி தேவர்கள் கூடியிந் நீடூர்க்
கூத்த னைப்பணி யாவிட லாமே. கூ

திருக்கருப்பறியலூர் பண்—நட்டராகம்

13. நீற்றுரு மேனியராய் நினைவார்த
முள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றனை தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றனைக் கூற்றுதைத்துக் கோல்வளையா
ளவளோடுங் கொகுடிக்கோயில்
ஏற்றனை மனத்தினு னினைந்தபோ
தவர்நமக் கினியவாறே. உ

திருவாழ்கொளிபுத்தூர் பண்—தக்கேசி

14. தலைக்க லன்றலை மேற்றரித் தானைத்
தன்னையென் னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கையா னையுரி போர்த்துகந் தானைக்
கூற்றுதைத் ததுரை சேர்கழ லானை
அலைத்தசெங் கண்விடை யேறவல் லானை
யானை யாவடி யேனடி நாயேன்
மலைத்தசெந் நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனே. க

திருப்பழமண்ணிப்படிக்கரை பண்—நட்டராகம்

15. செடிபடத் தீவிளைத்தான் சிலையார்மதிற் செம்புனஞ்சேர்
கொடிபடுமூரிவெள்ளை யெருதேற்றையு மேறக்கொண்டான்

கடியவன் காலன்றன்னைக் கறுத்தான்கழற் செம்பவளப்
படியவன் பாசுபதன் பழமண்ணிப் படிக்கரையே. ௬

திருவானைக்கா பண்—காந்தாரம்.

16. வலங்கொள்வாரவர் தங்கள் வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக்கண்சிவப் பானை
அலங்கனீர்பொரு மானைக் காவுடை யாதியை நாளும்
இலங்குசேவடி சேர்வா ரெம்மையுமாளுடை யாரே. ௧

திருக்கற்குடி பண்—நட்டராகம்.

17. வருங்கா லன்னுயிரை மடியத்திரு மெல்விரலால்
பெரும்பா லன்றனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பா ரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
விரும்பா வெம்பெருமா னடியேனையும் வேண்டுதியே. ௧

திருநாகேச்சரம் பண்—பஞ்சமம்.

18. பாலன தாருயிர்மேற் பரியாது பகைத்தெழுந்த
காலனை வீடுவித்துக் கருத்தாக்கிய தென்னைகொலாம்
கோல மலர்க்குவளைக் கழுநீர்வயல் சூழ்கிடங்கில்
சேலொடு வாளைகள்பாய் திருநாகேச் சரத்தானே. ௩

திருவாவடுதுறை பண்—தக்கேசி.

19. மறையவ னொரு மாணிவந் தடைய
வார மாயவ னருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற்
கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவ னெம்பெருமானென் றெப்போது
மேத்தி யேத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடு மடைந்தே
னாவ டுதுறை யாதியெம் மானே. ௧

திருவாவடுதுறை பண்—தக்கேசி.

20. கங்கைவார்சடை யாய் கணநாதா
காலகாலனே காமனுக்கனலே
பொங்குமாகடல் விடமிடற்றானே
பூதநாதனே புண்ணியா புனிதா
செங்கண்மால்விடை யாய் தெளிதேனே
தீர்த்தனேதிரு வாவடுதுறையுள்
அங்கணாவெனை யஞ்ச லென்றருளா
யாரெனக்குற வமரர்களேறே. ௧

திருக்கடவூர் வீரட்டம் பண்—நட்டராகம்.

21. அன்றா லின்னிழற்கீ ழறநால்வர்க் கருள்புரிந்து
கொன்றாய் காலனுயிர் கொடுத்தாய்மறை யோனுக்குமான்
கன்றா ருங்கரவா கடவூர்த்திரு வீரட்டத்துள்
என்றா தைபெருமா னெனக்கார்துணை நீயலதே. ௩

திருநள்ளாறு பண்—தக்கேசி.

22. தஞ்ச மென்று தன் றாளது வடைந்த
பாலன்மேல் வந்த காலனை யுருள
நெஞ்சி லோருதை கொண்டபி ரானை
நினைப்ப வர்மன நீங்ககில் லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுண் மிக்கெழுந் தெரியும்
நஞ்ச முண்டநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. ௪

திருப்புக்கொளியூர் அவிநாசி பண்—குறிஞ்சி.

23. உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே ௪

திருத்தினைநகர் பண்—தக்கேசி

24. பரிந்த சுற்றமு மற்றுவன் றுணையும்
பலருங் கண்டழு தெழவுயி ருடலைப்
பிரிந்து போமிது நிச்சய மறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை யுயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. ௮

திருக்கச்சியேகம்பம் பண்—தக்கேசி.

25. ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
யாதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. ௧

வடதிருமுல்லைவாயில்   பண்—தக்கேசி

26. மட்டுலாமலர்கொண் டடியிணைவணங்கு
மாணிதன்மேன்மதி யாதே
கட்டுவான்வந்த காலனைமாளக்
காலினாலாருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லைவாயிற்
செல்வனேசெழுமறை பகர்ந்த
பட்டனேயடியேன் படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ் சுடரே. ௬

திருக்கேதாரம்   பண்—நட்டபாடை

27. வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுன நணுகி
ஆளாயுய்ம்மி னடிகட்கிட மதுவேயெனி லிதுவே
கீளோடர வசைத் தானிடங் கேதாரமெ னீரே. ௫

போது திருமருகல்

28. வீழக்காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்
கூழையேறுகந் தானிடங் கொண்டதுங் கோவலூர்
தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்
வாழைகாய்க் கும்வளர் மருகனாட்டு மருகலே. ௧

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.

எட்டாந் திருமுறை.

திருப்பொற்சுண்ணம்.

1. அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. ௧௮

திருப்பூவல்லி.

2. அங்கி அருக்கன் இராவணன் அந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்

பங்கயில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. ௧௫

திருத்தோணோக்கம்.

3. காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ. ௧௧

சேத்திலாப்பத்து.

4. ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. ௯

அருட்பத்து.

5. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. ௭

திருப்பாண்டிப்பதிகம்.

6. கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. ௧௦

திருக்கோவையார்.

கவன்றுரைத்தல்.

7. முறுவல்அக் கால்தந்து வந்தென் முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தவெல் லாம்முழு துஞ்சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன் சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகந் தான்படர் வானெ மொளியிழையே. ௨௨௭

வேலனையழைத்தல்.

8. வேலன் புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்த வியக்கழல் வைத்தெழில் தில்லைநின்ற
மேலன் புகுந்தென்கண் நின்றா னிருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினின் நிற்பித்த பண்பினுக்கே. உ அசு

திருவிசைப்பா.

ஒன்பதாந் திருமுறை.

திருமாளிகைத்தேவர் க. கோயில் பண்-பஞ்சமம்.

1. கோலமே மேலை வானவர் கோவே குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள் கால காலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற் கோயில்கொண் டாடவல் லா
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத் தொண்டனேன் நணுகுமா (னே
[நணுகே. ரு

திருமாளிகைத்தேவர். உ கோயில், பண்-பஞ்சமம்.

2. காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன் படக்கடைக் கணித்தவன்
அல்லாப், பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர் தொண்ட
னேன் பெரும்பற்றப் புலியூர்ச், சேமநற்றில்லை வட்டங்கொண் டா
ண்ட செல்வச்சிற் றம்பலக் கூத்த, பூமல ரடிக்கீழ்ப் புராணபூ
தங்கள் பொறுப்பரென் புன்சொலின் பொருளே. கக

சேந்தனார். க திருவீழிமிழலை, பண்-பஞ்சமம்.

3. தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன் சந்திரன் இந்திரன்
எச்சன், மிக்கநெஞ் சரக்கன் புரர்கரி கருடன் மறலிவே ளிவர்மி
கை செகுத்தோன், திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி மிழலை
யான் திருவடி நிழற்கீழ்ப், புக்கிருந்தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. கo

திருவாலியமுதனார். உ கோயில், பண்-நட்டராகம்.

4. அலந்து போயினேன் அம்பலக்கூத்தனே அணிதில்லை நகராளீ
சிலந்ியை அரசாள்கவென் றருள்செய்த தேவதே வீசனே
உலந்தமார்க் கண்டிக் காகிஅக் காலனை உயிர்செக வுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேலொற்ற வந்தருள் செய்யாயே.

புருடோத்தமநம்பி: க கோயில், பண்-பஞ்சமம்.

5. ஆருயிர் காவலிங் கருமையாலே அந்தணர் மதலைநின் அடி
பணியக், கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக் குரைகழல் பணி
கொள மலைந்ததென்றால், , ஆரினி அமரர்கள் குறைவிலாதார் அவ

ரவர்; படித்துயர்களைய நின்ற, சீருயி ரேளங்கள் தில்லைவாணு
சேயிழையார்க்கினி வாழ்வரிதே. ௭

ஷை உ கோயில்.

6. ஆவா இவர்தந் திருவடிகொண் டந்தகன்றன்
மூவா உடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா இனவளைகள் கொள்வாரோ என்னையே. ௭

சேதிராயர் திருவிசைப்பா. கோயில்.

7. அன்ற ருக்கனைப் பல்லிறுத் தானையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீரெனுந்
தென்ற லார்பொழில் தில்லையு ளீரிவள்
ஒன்று மாகில ளும்பொருட் டே. ௯

திருமூலர் திருமந்திரம்.

பத்தாந் திருமுறை.

கடவுள் வாழ்த்து.

1. போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குந்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. ௨

அரசாட்சி முறை.

2. கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுககில் லானே. ௧

பதிவலியில் வீரட்டம் எட்டு.

3. மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே. ௭

அருளல்.

4. உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சு மவனே சமைக்கவல் லானே. ௪

திருக்கோயில்.

5. ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. ௩

பிராணாயாமம்.

6. ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. ௮

சமாதி.

7. மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே. ௫

அட்டமாசித்தி வசித்துவம்.

8. கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டறி வார்க்கு நமனில்லை தானே. ௭௨

கேசரியோகம்.

9. கட்டக் கழன்று கீழ் நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. ௧

10. மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே. ௭

11. தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடின் நமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே. ௬

அமுரிதாரணை.

12. கரையருகே நின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்

நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே. ச

சன்மார்க்கம்.

13. சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. க

தவம்.

14. ஒடுங்கி நிலைபெற்ற வுத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும் பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. க

சற்குரு நெறி.

15. தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்
தவிரவைத் தான்நமன் றூதுவர் கூட்டந்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. உ

இதோபதேசம்.

16. போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றன்னைக் கூறிநின் றுய்மினே. ச

நின்மலாவத்தை.

17. காலங்கி நீர்பூக் கலந்தஆ காயம்
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சும் ஓடி விரவவல் லார்கட்குக்
காலனும் இல்லை கருத்தில்லை தானே. உ

பிரபந்தமாலை

பதினோராந்திருமுறை

காரைக்காலம்மையார்

திரு இரட்டை மணிமாலை

1. தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும்—மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. கஉ

அற்புதத் திருவந்தாதி

2. செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன்னின் றடர்த்த —திருத்தக்க
மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால். ௮௦

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

க்ஷேத்திரத் திருவெண்பா

3. நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே—கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்தன்
பாடரவங் கேட்ட பகல். ௨௫

சேரமான் பெருமாள் நாயனார்

பொன்வண்ணத்தந்தாதி

4. சந்தித்த கூற்றுக்குக் கூற்றாம் பிணிக்குத் தனிமருந்தாஞ்
சிந்திக்கிற் சிந்தா மணியாகித் தித்தித் தமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும் வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ஆடியி னான்அடி யார்களுக் காவனவே. ௮௫

நக்கீரதேவ நாயனார்

கைலைபாதி காளத்திபாதி அந்தாதி

5. தாம்பட்ட தொன்றும் அறியார்கொல் சார்வரே
காம்புற்ற செந்நெற் கயிலைக்கோன்—பாம்புற்ற
ஆரத்தார் பத்தர்க் கருகணையார் காலனார்
தூரத்தே போவார் தொழுது. ௮௬

திருஈங்கோய்மலை எழுபது

6. மந்தி இனங்கள் மணிவரையின் உச்சிமேல்
முந்தி யிருந்து முறைமுறையே—நந்தி
அளைந்தாடி ஆலிக்கும் ஈங்கோயே கூற்றம்
வளைந்தோடச் செற்றான் மலை. ௯௪

கபிலதேவ நாயனார்

சிவபெருமான் திருவந்தாதி

7. அடியார்தம் ஆருயிரை அட்டழிக்குங் கூற்றை
அடியால் அருவாகச் செற்றான்—அடியார்தம்
மந்திரத்தால் ஏத்தி அகங்குழைந்து மெய்யரும்பி
அந்தரத்தார் சூடும் அலர். ௪

பரணதேவ நாயனார்

சிவபெருமான் திருவந்தாதி

8. பெற்றும் பிறவி பிறந்திட் டொழியாதே
பெற்றும் பிறவி பிறந்தொழிமின்—பெற்றுங்
குழையணிந்த கோளரவக் கூற்றுதைத்தான் தன்னைக்
குழையணிந்த கோளரவ நீ ௩

பட்டணத்துப்பிள்ளையார்

திருஏகம்பமுடையார் திருவந்தாதி

9. அடிவலப் பாலது செந்தா மரையொத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றின் எருத்திற வைத்த திளந்தளிரின்
அடியிடப் பாலது பஞ்சுற அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்ப மேய வரதருக்கே. ௪௪

10. நல்கும் புகழ்க்கட வூர்நன் மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றங் குளிர்திரைகள்
மல்குந் திருமறைக் காட்டமிர் தென்றும் மலைமகள் தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம் மேவிய பொன்மலையே. ௫௫

11. நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலங் கொச்சை தொண்டர்
குலாவுந் திருப்பனங் காடுநன் மாகறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி ஏகம்பர் ஆலயமே. ௬௪

சேக்கிழார் நாயனார்

திருத்தொண்டர் புராணம்

பன்னிரண்டாந் திருமுறை.

குங்குலியக்கலய நாயனார் புராணம்

1. வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டின்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற்பதி எறிநீர்க்கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி இருப்பது கடவூர் ஆகும். ௧

2. காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலய னாராம்
ஆலும்அன் புடைய சிந்தை அடியவர் அறியும் ஆற்றால்
சாலநீ பசித்தாய் உன்தன் தடநெடு மனையில் நண்ணிப்
பாலின்இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக என்றார். ௧௭

3. கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார் ௬௪

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

4. செங்குமுத மலர்வாவித் திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா ருடன்அமுது செய்தார்கள். ௨௪௭

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

5. மற்ற வண்பதி அணைந்துவீ ரட்டத்து மழவிடை யார்கோயில்
சுற்று மாளிகை வலங்கொண்டு காலனை யுதைத்தருட் டியசெய்ய
பொற்சி லம்பணி தாமரை வணங்கிமுன் போற்றிஉய்ந்தெதிர்நின்று
பற்ற றுப்பவர் 'சடையுடை யான்' எனும் பதிகஇன் னிசைபாடி.

6 ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆல வாயிற் சிவபெரு மானே என்றார். ௭௪0

7. மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க
இறைமன்னன் னெறியின் ஓங்க இகத்தினில் அவனி இன்பம்
குறைவில தெனினுங் கூற்றை உதைத்தவர் நாமங் கூறி
நிறைகடற் பிறவித் துன்பம் நீங்கிடப் பெற்ற தன்றே. ௮௯0

8. பற்றார்தம் புரங்கள்மலைச் சிலையால் செற்ற பரமனார்
திருப்புகலூர் பணிந்து போந்து
புற்றரவும் பணிபூண்ட புனித னார்தம் பூவணத்தைப்
புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுதேத்துங் கானப் பேரும்
கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலங் குறும்பலாக் குரம்பிட்டேத்திக் கூற்றுதைத்தார்
நெல்வேலி குறுகினாரே. ௮௮௯

9. அந்நகரில் அடியார்கள் எதிர்கொள்ளப் புக்கருளிக்
கொன்னவிலுங் கூற்றுதைத்தார் குரைகழல்கள் பணிந்தேத்தி
மன்னிஅமர்ந் துறையுநாள் வாகீசமாமுனிவர்
எந்நகரில் எழுந்தருளிற் றென்றடியார் தமைவினவ. ௯௨௭

10\. கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோ கரணம் பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றின்மிசை வருவார்இந் திரன்றன் நீல பருப்பதமும்
பாடிமற் றிறைவர் தானம்
போற்றியசொன் மலர்மாலை பிறவும் பாடிப் புகலியர்தம்
பெருந்தகையார் புனித மாகும்
நீற்றின்அணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிதுமகிழ்ந் தப்பதியில் நிலவு கின்றார். ௧0௨௭

11\. போற்றி மெய்யருட் டிறம்பெறு பரிவுடன் வணங்கி
நீற்றின் மேனியில் நிறைமயிர்ப் புளகங்கள் நெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின் புறம்போந் தருளி
ஆற்றும் இன்னருள் வணிகர்மேற் செலஅருள் செய்வார். ௧0௭௯

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்.

12\. மீளாத அருள் பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே
ஆளான வன்தொண்டர் அந்தணர்கள் தாம்போற்ற அமர்ந்து வைகி
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய் மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர்வணங்கிச் சென்று சார்ந்
[தார். ௧௧௯

13\. கூற்றுதைத்தார் திருக்கொகுடிக் கோயில் நண்ணிக்
கோபுரத்தைத் தொழுதுபுகுந் தன்பர் சூழ
ஏற்றபெருங் காதலினால் இறைஞ்சி ஏத்தி எல்லையிலாப்
பெருமகிழ்ச்சி மனத்தில் எய்தப்
போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியில் வைகிப்
புனிதரவர் தமைநினையும் இன்பம் கூறிச்
சாற்றியமெய்த் திருப்பதிகம் சிம்மாந் தென்னும்
தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில் ௧௧௭

14\. திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்து பொடியார்மேனி
மருவாரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலைவளைத்த
பெருவீரர் வலம்புரத்துப் பெருகார்வத் தொடுஞ்சென்றார். ௧௪௯

15\. வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சை உண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை உமக்கின் றானால் என்செய்வீர் போதா தென்றார்: ௩௫௪

செருத்துணை நாயனார் புராணம்

16. சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண் குடிமுதல்வர்
நீரின் மலிந்த செய்யசடை நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த
வேரி மலர்ந்த பூங்கழல்சூழ் மெய்யன்புடைய சைவரெனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார் பரவுந் தொண்டின் நெறி நின்றார் உ

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் புராணம்

17. கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார். அ

வெள்ளானைச் சருக்கம்

18. உரைப்பார் உரைஎன் றெடுத்ததிருப் பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பாண் மையில்நீள் தடம்புயத்து மறலிமைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற் றுடலிற்சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயில் தருவித்தான்.

ஆகமொத்தம் செய்யுள் 265.

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர்த் திருமுறைத்திரட்டு முற்றிற்று.

செய்யுள் முதற் குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்
[அ]	
அங்கி	36
அடியார்	42
அடிவலப்	43
அடுத்து	17
அட்ட	6
அந்தணாளை	32
அந்நகரில்	44
அயன்கலை	36
அரக்கனீ	20
அலந்து	38
அலையார்கட	21
அலையார்ந்த	21
அன்றடற்	2
அன்றருக்	39
அன்றாலின்	35
[ஆ]	
ஆய்ந்தவன்	30
ஆருயிர்	38
ஆருருவ	29
ஆலக்கோலத்	1
ஆலநீழலமர்	15
ஆலநீழலார்	2
ஆலந்தானு	35
ஆலமுண்	5
ஆலமேஅமு	44
ஆலால	22
ஆலின்கீ	11
ஆவாஇவர்	39
ஆற்றநல்	9
ஆற்றரு	40
ஆற்றையு	3
[இ]	
இடறினார்	8
இயமன்	10
இரக்கமுன்	16
இரவணா	23
இழித்தன	11
இறையென்	19
இன்னங்	19
[ஈ]	
ஈட்டு	18
[உ]	
உச்சியில்	39
உருமூன	22
உரைப்பா	35
உற்றவன்	29
[எ]	
எடுதசவன்	8
எரிதரு	8
[ஏ]	
ஏய்ந்தறுத்	11
ஏற்றானை	27
ஏற்றி	40
[ஒ]	
ஒடுங்கி	41
ஒட்டாத	14
ஒருவனை	27
ஒறுத்தா	24
ஒன்றியிருந்	10
[ஓ]	
ஓதினத்	17
[க]	
கங்கை	34
கடுத்தானே	5
கட்டக்க	40
கட்டவல்	40
கட்டறுத்	16
கண்டந்தான்	18
கண்டுகொள்	18
காப்புறு	13
கருப்புவில்	44
கருமானி	32
கருமையாற்	32
கரையரு	40
கல்லாஅர	39
கல்லாலி	28
கள்ளி	28

செய்யுள்	பக்கம்
கறுத்த	24
கற்றானுங்	32
கற்றுக்	18
கன்றிய	9
[கா]	
காடிலா	33
காதமரத்	8
காமனுட	37
காமனைக்	38
காய்ந்தாயனங்	12
காய்ந்தானைக்	5
காய்ந்தான்	15
காய்ந்துதங்	7
காய்ந்துவரு	4
கார்கொள்	19
கார்ம	20
காலகாலர்	5
காலங்கி	41
காலபாசம்	15
காலனைக்கழ	5
காலனைக்காய்	43
காலனைக்காலாற்கா	27
காலனைக்காலாற்செ	11
காலனையோ	9
காலனைவீழச்	12
காலன்றனை	7
காலாலுயிர்	5
காலைநன்	1
காற்றனாற்	11
காற்றினைக்	18
காற்றுத்	32
கானமோ	16
[கு]	
குழைத்திகழ்	13
குற்றாலங்	22
குனிந்த	28
குன்றாத	25
[கூ]	
கூற்றம்	16
கூற்றினை	14
கூற்றுதைத்த	9
கூற்றுதைத்தார்திரு	45
கூற்றுதைத்தார்மகிழ்	45
கூற்றுவன்	29
கூற்றைக்கடந்	12
கூற்றைவென்	37
[கே]	
கேழல	13
[கொ]	
கொடிகொளேற்	7
கொடியவேற்	6
கொடுங்கண்	15
கொடுவினை	29
கொல்லத்தா	17
[கோ]	
கோயில்	46
கோலமே	38
[ச]	
சதுர்முகன்	10
சந்தித்த	42
சமரமிகு	26
சவந்தாங்கு	25
[சா]	
சாடவெடுத்	10
சாற்றிச்சொல்	18
சாற்றினேன்	19
சாற்றுஞ்	41
[சி]	
சிட்டர்	15
சிந்தை	12
[சீ]	
சீரின்	46
சீர்த்தானைச்	20
[சூ]	
சூலமேந்	17
சூலம்படை	2
[செ]	
செங்குமுத	44
செடிபடத்	33
செருக்கினால்	42
சென்றுரு	24
[சே]	
சேர்ப்பது	7
சேவினே	12

செய்யுள்	பக்கம்
[ஞா]	
ஞாலத்தார்	17
ஞாலத்தை	30
ஞாலமல்	18
ஞாலம்இர்	37
[த]	
தக்கன்	38
தஞ்ச	35
தடுத்தானைத்	26
தலக்கமே	12
தலைக்கலன்	33
தலையவ	22
தலையுருவச்	26
தவிரவைத்	41
[தா]	
தாம்பட்ட	42
தாருடை	14
[தி]	
திருவீரட்	45
[தீ]	
தீவினை	40
[து]	
துஞ்சலுந்	9
துடியார்	23
[தொ]	
தொடுத்தார்	3
தொண்டசை	8
தொண்டர்	21
தொல்லைவினை	41
[தோ]	
தோடுலா	10
தோலிற்	24
தோலுநூ	3
[ந]	
நடுக்கத்	19
நடுவிலாப்	14
நரியார்	31
நல்கும்	43
நல்லவர்	9
நன்றுநகு	2
[நா]	
நாடிவர்	16
நாடுடைய	32
நாமார்க்குங்	31
நாற்றமலர்	1
நாற்றமிக்க	3
[நி]	
நிலாவு	
நிலையவன்	28
நின்னடியே	2
[நீ]	
நீலநன்	14
நீறுரு	33
நீற்றினைநி	10
நீற்றினையு	26
[நூ]	
நூற்றனைத்	42
[நெ]	
நெடியவிசும்	30
நெய்யினொடு	25
[ப]	
படர்சடைக்	13
படைகொள்	6
படையும்	19
பதத்தெழு	13
பதைத்தெழு	3
பரிந்த	35
பல்லாடு	30
பற்றார்	44
பன்றியின்	4
[பா]	
பாடினை	7
பாய்ந்தவன்	9
பாருரு	32
பார்த்துப்	16
பாலமதி	3
பாலனடி	5
பாலனதா	34
பாலனாய்	10
பாலனார்	8
பாலனுக்கா	13
பாலுந்	2
பால்வெண்	6

செய்யுள்	பக்கம்
[பூ]	
பூத்தா	23
[பெ]	
பெற்றும்	43
[பே]	
பேராது	31
[போ]	
போற்றிசெயக்	41
போற்றிசைத	39
போற்றிமெய்	45
[பை]	
பைதற்பிணக்	11
[ம]	
மடித்தாடு	31
மட்டிலங்கு	27
மட்டுலா	36
மண்ணிடைக்	12
மதிநுதன்	6
மந்திஇனங்	42
மருட்டுயர்	13
மலக்கினின்	32
மலிகடுந்	4
மறித்திகழ்	13
மறுத்தவர்	1
மறையவனொரு	34
மறையவர்வேள்	44
மற்றவண்	44
மற்றுங்	19
[மா]	
மாணிக்குயிர்	14
மாணிதன்	4
மாணியை	7
மாலினுக்	2
மால்யானை	25
மாவாய்ப்	20
மாறுகொண்டு	16
மாற்றமொன்	15
[மி]	
மிக்க	6
[மீ]	
மீளாத அருள்	45
மீளாதவா	21
[மு]	
முறுவல்	37
[மூ]	
மூலத்து	39
மூல நாடி	40
மூலனுமூர்த்	23
மூவனாய்	17
[மெ]	
மெய்யனே	37
[மே]	
மேலுமறிந	15
மேலையண்	40
மேல்வைத்த	31
[வ]	
வந்திவ்வா	16
வருங்காலன்	34
வலங்கொள்	34
[வா]	
வாமதே	19
வாய்ந்த	43
வாளோடிய	36
வானவர்	45
[வி]	
விச்சை	19
விடமலி	11
விடுத்ததூ	16
விடுததமால்	17
விதியாய்	1
[வீ]	
வீழக்காலனை	36
[வெ]	
வெண்டலை	13
[வே]	
வேலன்புகுந்	38
வேலைமலி	4

உ

செந்திலாண்டவன் துணை.

திருக்கடவூர்த் திருமுறைத் திரட்டு.

திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடு.